தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, மார்கழி 24, திருவள்ளுவர் ஆண்டு 2049

2019 ஜனவரி 8, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.”

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றை சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

31—

கம்பிவட ஊர்தி

***30894—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை மலைப் பகுதியிலிருந்து ஆழியாறு வரை கம்பிவட ஊர்தி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

[2019 ஜனவரி 8

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள், வால்பாறை தொகுதி, வால்பாறை மலைப் பகுதியிலிருந்து ஆழியாறு வரை கம்பிவட ஊர்தி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவினை எழுப்பியிருக்கின்றார்கள். ஆனைமலை புலிகள் காப்பகத்தில் கம்பிவட ஊர்திப் பாதை அமைக்கக் கோரியுள்ள பகுதியில் மட்டுமே வாழும் மற்றும் அழிவின் விளிம்பில்-endemic and endangered *ஆக உள்ள* Hornbills *என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மிகப் பெரிய இருவாட்சிப் பறவைகள் காணப்படுகின்றன. இப்பறவைகள் கேரளா மற்றும் தமிழ்நாடு எல்லைப் பகுதிகளில் உள்ள காப்புக் காடுகளில் மட்டுமே காணப்படுகின்ற அரிய வகை பறவை இனமாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் வால்பாறை மலைப் பகுதி முதல் ஆழியாறு வரை கம்பிவட ஊர்தி அமைக்கும்பட்சத்தில் ஆனைமலை புலிகள் காப்பகம், டாப்சிலிப் பகுதிகள் மற்றும் பரம்பிக்குளம் புலிகள் காப்பகப் பகுதிகளிலிருந்து வால்பாறை பகுதிகளுக்கு அட்டக்கட்டி பள்ளத்தாக்கு வழியாக இனப்பெருக்கம் செய்வதற்குச் செல்லும் பறவைகளுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் வால்பாறை மலைப் பகுதியிலிருந்து ஆழியாறு வரை கம்பிவட ஊர்தி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்ற சொல்லைச் செயலாக்கிக் காட்டுகின்ற வகையிலே, அம்மா அவர்களின் கருணை உள்ளத்தை மனதில் வைத்தும், புரட்சித் தலைவரின் வள்ளல் தன்மையை ஒருங்கே பெற்றும்*

2019 ஜனவரி 8]

அம்மா அவர்கள் வழியிலே தமிழக ஏழையெளிய மக்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் வரும் 'தை' பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும்விதத்தில் அரிசி, கரும்பு, சர்க்கரை, முந்திரி, திராட்சையோடு ஆயிரம் ரூபாயை அள்ளித் தந்து மக்களின் மனதிலே நீங்கா இடம் பெற்ற எங்கள் மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குத் துணையாக இருந்து வழிநடத்தி வரும் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை எனது சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட ஆனைமலைப் பகுதியை தனி வருவாய் வட்டமாக அறிவித்ததோடு, அதைச் செயல்படுத்தும்விதமாக காணொலிக்காட்சிமூலம் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பரிந்துரை செய்த, கோவைக்குப் பெருமை சேர்க்கின்ற எங்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும், இந்த வட்டத்தை அறிவிக்க என்னோடு சேர்ந்து குரல் கொடுத்து வந்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், அன்புச் சகோதரர் அண்ணன் மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களுக்கும், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் திரு. சி. மகேந்திரன் அவர்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதி 40 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட ஒரு மலைப் பிரதேசமாகும். சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டவர்கள் அதிகமாக வந்து செல்கின்ற பகுதி. வாகனங்களில் பொள்ளாச்சியிலிருந்து செல்ல சுமார் மூன்று மணி நேரம் ஆகும். சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி ரோப் கார் வசதி செய்து கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் அதனைச் செய்து கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்த வினாவிற்கு முதலிலேயே தெளிவாக பதில் கூறியிருக்கிறேன். இருந்தாலும், வால்பாறை முதல் ஆழியாறு வரை வனத் துறைக்குச் சொந்தமான பகுதிகளில் புதியதாகப் பாதை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமாயின், சாலை அமைக்கும் துறைகளான நெடுஞ்சாலைத் துறை அல்லது PWD போன்ற user agencies ஆக உள்ள துறைகள் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி, இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்க வேண்டும். அப்படி விண்ணப்பிக்கும்பட்சத்தில், வனத் துறையானது அனுமதி வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கும் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதிக்குச் செல்ல ஒரு பாதைதான் உள்ளது. மழைக் காலங்களில் மரங்கள் சாய்ந்தாலோ அல்லது மண் சரிவு ஏற்பட்டாலோ போக்குவரத்து நிறுத்தம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. அங்குள்ள மக்களுக்கு எந்தப் பொருட்களையும் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, சேத்துமடை–சர்க்கார்பதி வழியாக மாற்றுப் பாதை ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், வனத் துறைக்குச் சொந்தமான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்குச் செல்லும் சின்ன கல்லாறு, பெரிய கல்லாறு, Ryan Division மற்றும் சின்கோனா ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அந்தச் சாலைகள் வனத் துறைக்குச் சொந்தமானவை. வனத் துறை அனுமதி அளித்தால்தான் அந்தச் சாலைகளைச் செப்பனிட முடியும். எனவே, வால்பாறை மலைப் பகுதிக்குச் செல்ல மாற்றுவழிப் பாதையையும், மேற்படி பகுதிகளில் உள்ள சாலைகளைச்

2019 ஜனவரி 8]

சீரமைத்துத் தருவதற்கு வனத் துறையின் அனுமதியையும் பெற்றுத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பிவடப் பாதைகள் அமைக்கக் கோரியுள்ள பாதைகளில் அமைந்துள்ள புதுத் தோட்டம் எஸ்டேட் காடுகளில் மிகவும் அரிய வகை குரங்குகளான சிங்கவால் குரங்குகள் அதிகளவில் காணப்படுகின்றன. மேலும், கம்பிவடப் பாதை அமைக்கக் கோரியுள்ள பாதையில் குரங்கருவி–நவமலை, ஆனைமலை–பூனாட்சி, ஆனைமலை–Water falls, ஆனைமலை–Mount Stuart ஆகிய பகுதிகளில் யானைகள் செல்லும் பாதைகளும் உள்ளன. தேயிலைத் தோட்டங்களான water falls–ஐயர்பாடி வரை யானைகள் செல்லும் பாதைகளானது குறுகி பாதிப்படைந்துள்ளன. வால்பாறை, ஆழியாறு வழித்தடத்திலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வழித்தடத்திலும் கம்பிவடப் பாதைகளை அமைக்கின்றபோது, மரங்களை வெட்டி சுத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். இப்பகுதி புலிகள் காப்பகத்தின் உள் மண்டலப் பகுதியாக இருப்பதால், வனங்களைச் சுத்தம் செய்தல் மற்றும் மரம் வெட்டுதல் போன்ற செயல்பாடுகள் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தால் தடை செய்யப்பட்டுள்ளன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை அமைக்கின்ற பணியைப் பொறுத்தவரையில், user agencies மூலம் விண்ணப்பித்தால் அதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத் தர முடியும். அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*